# 29. ஊரகக் கடன் சிக்கல்கள்

# (Problems of Rural Indebtedness)

ஊரக மக்களின் கடன் சுமை நீண்ட கால வரலாறு உடையதாகும். ஊரகங்களில் வாழும் விவசாயிகள், கைவினைஞர்கள், குடிசைத் தொழில் செய்வோர், சிறுதொழில் செய்வோர், சிறு வணிகர்கள் ஆகியவர்களின் கடன் சம்பந்தப்பட்ட சிக்கல்களை ஆராய்வதே ஊரகக் கடன் சிக்கல் எனப்படும். அடிக்கடி வேளாண்மை பொய்த்து விடுவதால் மீண்டும் மீண்டும் விவசாயி கடன் வாங்குகின்றான்; திருப்பி செலுத்த முடிவதில்லை. இந்திய விவசாயி கடனோடு பிறந்து, கடனோடு வாழ்ந்து, கடனோடு மடிகின்றான்; தன் சந்ததிகளுக்கும் கடனை விட்டுச் செல்கின்றான். ஊரகங்களில் வாழும் பிற மக்களின் வருவாயும் மிகக் குறைவாக இருப்பதால் அடிக்கடி கடன் வாங்க நேரிடுகின்றது. இப்பகுதியில் கடன் வாங்கக் காரணங்களையும் அதன் விளைவுகளையும் மற்றும் கடன் நிவாரணங்கள் ஆகியவைகளையும் நாம் சுருக்கமாக ஆராயலாம்.

**கடனுக்கான காரணங்கள்**

பின்வரும் முக்கியக் காரணங்களுக்காக ஊரகங்களில் உள்ளோர் கடன் வாங்குகின்றார்கள்.

1. பல்வேறு காரணங்களுக்காகத் தன்னுடைய மூதாதையர்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்துவதற்கு.
2. நிலங்கள் மிகச் சிறுசிறு துண்டுகளாக இருப்பதால் சாகுபடிச் செலவு அதிகமாகின்றது. இதை சரிகட்ட கடன் வாங்க வேண்டியுள்ளது.
3. பருவ மழை அடிக்கடி பொய்த்து விடுகின்றது. எனவே நிலத்திலிருந்து வருமானம் குறைந்து விடுகின்றது. இந்நிலையில் பல்வேறு குடும்பச் செலவுகளுக்காகவும் கடன் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விடுகின்றது.
4. கிராம மக்கள் கல்வியறிவுயற்றவர்கள்; அறியாமையில் மூழ்கி கிடப்பவர்கள். எனவே பல்வேறு செலவுகளையும் எவ்வாறு குறைத்துக் கொள்வது என்பதை அறியாதவர்கள். அவ்வாறே வேளாண்மை தவிர பிற வழிகளாலும் எப்படித் தங்களின் வருவாயை அதிகரித்துக் கொள்வதென்பதையும் அறியாதவர்கள்.

5. எந்தத் தொழில் செய்தாலும் கிராம மக்களின் வருவாய் குறைவாக உள்ளது. இந்நிலையில் வாழ்க்கை நடத்துவதற்குக் கடன் வாங்க வேண்டியுள்ளது. வட்டிக் கடைக்காரர்கள் ஊரக மக்களைக் கடன் வாங்க மறைமுகமாகத் தூண்டுகிறார்கள்.

6. ஊரக மக்கள் அதிக வட்டிக்குக் கடன் வாங்க வேண்டியுள்ளது. அவர்களுக்கு 36 விழுக்காடு வட்டி விகிதத்திற்குக் குறைந்து கடன் கிடைப்பதில்லை. சில சமயம் 120 விழுக்காடாகக்கூட வட்டி வசூலிக்கப்படுகின்றன.

7. பல்வேறு மத, சமூக செயல்களுக்காகத் தமது பொருளாதார சக்தியையும் தாண்டி ஆடம்பரமாகச் செலவு செய்கின்றார்கள்.

8. உறவினர்களுடன் ஏற்படும் சிறு தகராறுகளைக்கூட கௌரவ பிரச்சனையாகக் கருதி நீதிமன்றங்களுக்குச் செல்கின்றார்கள். இங்கு ஏற்படும் செலவினங்களுக்காகக் கடன் வாங்க வேண்டியுள்ளது.

9. நிலவரிகள் அதிகமாக இருப்பதுடன், வரி வசூலிப்பதில் கெடுபிடிகள் அதிகமாயுள்ளது. இவைகளைத் தாக்குப்பிடிக்கக் கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை.

10. விளைபொருட்கள் நல்ல விலையில் உடனடியாக விற்க தகுந்த வசதிகள் இல்லை. எனவே கடன் வாங்கிக் கொண்டு, அவரிடமே விளைபொருட்களைக் குறைந்த விலையிலாவது விற்றுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கையில் கடன் வாங்குகின்றனர்.

11. பெரும்பான்மையான குடியானவர்கள் ஏழைகளாக இருக்கின்றனர். எனவே ஆடைகள், மருந்துகள் போன்றவைகளை வாங்கவும் அன்றாடச் செலவுகளுக்கும் அவர்கள் கடன் வாங்க வேண்டியுள்ளது.

## கடன் வாங்குவதின் விளைவுகள்

1. வேளாண் குடிமக்கள் கடன் வாங்கும்பொழுது, அதுவும் அதிக வட்டிக்குக் கடன் வாங்கும்பொழுது வட்டியைக் கொடுக்கவே அவர்களின் வருவாயின் பெரும்பகுதி செலவாகி விடுகின்றது. நிலத்தை அடமானம் வைத்துக் கடன் வாங்கியோர், கடனையும் வட்டியையும் கொடுக்க முடியாமல் நிலத்தையே இழக்கின்றனர். பின் வேளாண் தொழிலாளிகளாகி விடுகின்றனர்.

2. ஏழை விவசாயி தன்னுடைய உழைப்பின் பயனின் பெரும் பகுதி வட்டியாகப் போய் விடுகின்றது என நெஞ்சுருகும்போது அவனுடைய உழைப்பாற்றலும் ஆர்வமும் குறைந்து விடுகின்றது.

3. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக, அறுவடை முடிந்தவுடன் குறைந்த விலையில் விற்க நேரிடுகின்றது. எனவே அவனுடைய வருமானம் குறைகின்றது.

4. விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவைகளின் விலைகள் அதிகமாக இருக்கும்போது விவசாயி வாங்குகின்றான்; அதைப் பெரும்பாலும் அதிக வட்டிக்குக் கடன் வாங்கிய பணத்தைக் கொண்டே வாங்குகின்றான். ஆனால் அறுவடை முடிந்தவுடன் விலை குறைவாக இருக்கும்போது விற்க வேண்டிய அவசியத்திற்குள்ளாகின்றான். இவ்வாறு இரு தலைக்கொள்ளி எறும்பாக அவதிப்படுகின்றான்.

5. முக்கியமாக ஊரக பெருநிலக்கிழார்களிடமும் வட்டிக் கடைக்காரர்களிடமும்

கடன் வாங்கியவர்கள் அவர்களுக்குப் பல்வேறு வேலைகளைச் சம்பளமின்றி செய்ய வேண்டியுள்ளது ; மேலும் விளை பொருள்களையும் கணிசமான அளவிற்கு இனாமாகக் கொடுக்க வேண்டியுள்ளது. இவைகளின் எல்லைக் கடக்கும்போது அதுவே கொத்தடிமையாக உருவெடுக்கின்றது.

6. வாங்கிய கடனை உற்பத்திக் காரணங்களுக்குப் பயன்படுத்துவதில்லை. கடனை எந்தக் காரணத்திற்காக வாங்கினார்களோ அதற்குச் செலவிடுவதில்லை.

**கடன் நிவாரணம்**

அரசின் பல்வேறு ஊரகக் கடன் நிவாரண நடவடிக்கைகளைப் பின்வருமாறு இருவகையாகப் பிரிக்கலாம்.

1. வாங்கிய கடனைச் சீரமைத்தல் : தந்தை பட்ட கடனை மகன் அடைப்பதில் பல சலுகைகள் தரப்பட்டுள்ளன. கடனை முழுவதும் தள்ளுபடி செய்தல், ஓரளவிற்குத் தள்ளுபடிச் செய்தல், தவணை முறையில் கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்த அனுமதித்தல் போன்ற சலுகைகளை அரசு அளித்து சட்டமியற்றியுள்ளது. இவைகளின் தன்மை மாநிலத்திற்கு மாநிலம் வேறுபடுகின்றன.

1975–ஆம் ஆண்டு சூலைத் திங்களில் அறிவிக்கப்பட்ட 20 அம்சத் திட்டத்தின்படி குடும்ப வருவாய் ஆண்டுக்கு ரூ.2,400க்குட்பட்ட மிகச்சிறு விவசாயிகள், நிலமற்ற வேளாண்மைத் தொழிலாளிகள் மற்றும் ஊரகக் கைவினைஞர்கள் ஆகியோர் தனியார் லேவாதேவிக்காரர்களிடம்பட்ட மொத்த கடனும் வட்டியும் தள்ளுபடி செய்து அரசு சட்டமியற்றியது. இதனால் ஏராளமானோர் பயனடைந்துள்ளனர்.

**வேளாண்மை மற்றும் ஊரகக் கடன் தள்ளுபடித் திட்டம்**

**(Agricultural and Rural Debt Relief Scheme, 1990)**

15.05.1990 முதல் செயல்படுத்தப்படும் இத்திட்டம் 1990–91 அரசு வரவு செலவு திட்டத்தில் நாடாளுமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. முதலில் ரூ.1000 கோடி இதற்கு தேவையெனக் கருதப்பட்டது. ஆனால் அதன்பின் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டதால் தேவைப்படும் தொகை அதிகரித்துவிட்டது. மாற்றங்களுக்கு பின்பு இத்திட்டத்தின் இயல்புகளாவன:–

விவசாயிகள், கைவினைஞர்கள், நெசவாளிகள், மீனவர்கள் ஆகியோர் பொதுத்துறை வணிக வங்கி, மண்டல ஊரகு வங்கி, கூட்டுறவு கடன் சங்கம் ஆகியவைகளில் வாங்கியிருந்த கடன் தொகை தள்ளுபடி செய்யப்படும். அரசு வணிக வங்கி மற்றும் மண்டல ஊரக வங்கி ஆகியவைகள் கடன் தள்ளுபடி செய்த தொகையை மத்திய அரசு கொடுத்து ஈடு செய்யும். ஆனால் கூட்டுறவு கடன் தள்ளுபடியில் பாதியை மத்திய அரசும், மீதி பாதியை சம்பந்தப்பட்ட மாநில அரசும் ஏற்றுக் கொள்ளும். தனிநபர் வாங்கிய கடனில் ரூ.10,000 வரை இவ்வாறு தள்ளுபடி செய்யப்படும்.

இத்திட்டத்தில் 1992–93 வரை ரூ.7,829 கோடி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கின்றது. இதில் ரூ.2,834 கோடி பொதுத் துறை வணிக வங்கிகள், ரூ.795 கோடி மண்டல ஊரக வங்கிகள், ரூ.4,200 கோடி கூட்டுறவு வங்கிகள் பங்காகும். மேற்கொண்டும் மத்திய அரசு 1993–94 பட்ஜெட்டில் ரூ.500 கோடி ஒதுக்கியது.[1]

2. புதிய கடனை நெறிப்படுத்துதல் : பழைய கடன் சிக்கலைத் தீர்த்தால்

மட்டும் போதாது. மேற்கொண்டும் புதிய கடன் தொல்லையில் சிக்காமல் ஊரக மக்களைப் பாதுகாக்க வேண்டும். குறைந்த அளவு கடனைப் பெறவும், கடன் வாங்கிய காரணத்திற்காக மட்டும் செலவழிக்கவும், தற்பொழுது பல்வேறு அமைப்புகள் அறிவுரை வழங்குகின்றன.

1976–ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட சிவராமன் குழு அறிக்கை பரிந்துரையை ஏற்று வணிக வங்கிகளும் கூட்டுறவு சங்கங்களும் பிறப்பு, கல்வி, திருமணம், மருத்துவம், இறப்பு, பிற சமுதாய மற்றும் மதப் பண்டிகைகளைக் கொண்டாடுவதற்கும் கடன் தருகின்றன.

ஏழை மக்களுக்களின் முன்னேற்றத்திற்காகவே என்று பல திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. எடுத்துக்காட்டாக ஜவகர் கிராம் சம்ருதி யோசனா, ஸ்வர்ண ஜெயந்தி கிராம் ஸ்வராஜ்கர் யோசனா, பிரதம மந்திரி கிராமோதய யோசனா, இந்திரா அவாஸ் யோசனா, அன்னபூர்ணா, தேசிய ஊரக வேலை வாய்ப்பு உத்தரவாதத் திட்டம், பாரத் நிர்மான் போன்றவைகள் மூலம் வேலை வழங்கப்படுகின்றன. மேலும் சுய உதவிக் குழுக்கள் நாம் நாட்டில் ஏராளமாக உருவாக்கப்பட்டு பெரும் வெற்றி பெற்று வருகின்றது. மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் எளிதாக வணிக வங்கிகளிடம் கடன் பெற்றுக் கொள்ளலாம். இவர்களின் வாழ்வு வளம் பெறும் போது கடன் சிக்கல்கள் மறைந்து விடும்.

# 30. இந்தியாவில் வறுமை

## (Poverty in India)

எல்லாப் பின்தங்கிய நாடுகளும் வறிய நாடுகளாகவே உள்ளன. உலகுக்கெல்லாம் மூத்தக்குடி நம் குடி. ஆனாலும் பின் தங்கிய நாடுகளிலேயே முதன்மையானது என்னும் பட்டமே இன்றுவரை அது பெற்ற பட்டம். வறுமை என்பது இந்நாட்டில் நீண்ட காலமாக இருந்து வரும் ஒரு நோய். கம்பன் தசரதனைப் பற்றி 'ஈந்தே கடந்தான் இரப்போர் கடலை' என்று கூறியதிலிருந்து அக்காலத்திலும் வறியவர்கள் கடல் போல் இருந்திருக்கின்றனர் எனத் தெரிய வருகின்றது.

தனியொருவனுக் குணவிலையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்.

என்று பாரதியார் எச்சரித்தும், இன்று இந்திய மக்கள் எல்லோரும் "வறுமையை விரட்டுவோம்" என முழக்க மிட்டும் வறுமை "என்றும் பதினாறாக" (ஒழியாமல்) நிலைத்திருக்கின்றது. இப்பகுதியில் இந்தியாவின் ஏழ்மையின் இலக்கணம் , அளவு, காரணங்கள், வறுமையை ஒழிக்கும் வழிமுறைகள் ஆகியவற்றைப் பற்றி ஆராயலாம்.

### 1. வறுமைக்கோடு - இலக்கணம்

உணவு மற்றும் வேளாண்மை அமைப்பின் (FAO) முதலாவது டைரக்டர் ஜெனரலான லார்டு பாய்ட் ஓர் (Lord Boyd Orr) என்பார் பட்டினிக்கோடு என்பதற்கு 1945 ல் இலக்கணம் வகுத்தார். அதன் அடிப்படையில் இந்தியப் பொருளாதார நிபுணர்களான காட்கில் (D.R. Gadgil), லோகநாதன் (Dr. P.S. Loganathan), கங்கூலி (B.N. Ganguly), அசோக் மேத்தா (Ashok Metha) மற்றும் பலர் 'வறுமைக் கோடு' (Poverty line) என்பதற்கு இலக்கணம் வகுத்தனர். இந்த உடம்பில் உயிரைத் தங்க வைப்பதற்குக் குறைந்த பட்சம் தினசரி நகரத்தில் வாழும் ஒரு மனிதருக்கு 2100 கலோரியும், கிராமத்தில் வாழ்பவருக்கு 2400 கலோரியும் தேவை. இந்த அளவு உணவுப் பொருட்களை வாங்க மாதத்திற்கு ஒரு நபருக்கு 1993 - 94 ஆம் ஆண்டில் கிராமப்புறத்தில் ரூ. 228.90ம், நகர்ப்புறத்தில் ரூ. 264.10 ம் தேவை. இந்த கலோரி அளவுக்குக் குறைவாகவோ அல்லது இந்த பண அளவுத் தொகைக்குக் குறைவாகவோ வாழ் பவர்களை வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ்பவர்கள் என்று கூறப்படுகின்றது.

### 2. இந்தியாவில் வறுமையின் அளவு

இந்தியாவில் மிக அதிக சதவிகிதத்தினர் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்கின்றனர். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களின் எண்ணிக்கையை

பலர் பலவிதமாகக் கணக்கிட்டுக் கூறினாலும் அவர்கள் எல்லோருமே மிக அதிக சதவிகித மக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்வதாகக் கூறியுள்ளார்கள். உதாரணமாக டாக்டர் ஒஜா (Dr. P.D. Ojha) அவர்களின் கணக்குப்படி இந்தியாவில் 1967 - 68ல் 70% மக்கள் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழ்ந்தனர்.

**வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்கள் எண்ணிக்கையும் விழுக்காடும்**

(எண்ணிக்கை மில்லியனில்)

| ஆண்டு | ஊரகம் | | நகரம் | | இந்தியா | |
|---|---|---|---|---|---|---|
| | எண் | % | எண் | % | எண் | % |
| 1973-74 | 261 | 56.4 | 60 | 49.0 | 321 | 54.9 |
| 1977-78 | 264 | 53.1 | 65 | 45.2 | 329 | 51.3 |
| 1983 | 252 | 45.7 | 71 | 40.8 | 323 | 44.5 |
| 1987-88 | 232 | 39.1 | 75 | 38.2 | 307 | 38.9 |
| 1993-94 | 244 | 37.3 | 76 | 32.4 | 320 | 36.0 |
| 1999-2000 | 193 | 27.1 | 67 | 23.6 | 260 | 26.1 |
| 2007 | 171 | 21.1 | 50 | 15.1 | 220 | 19.3 |

குறிப்பு : 2007 எதிர்பார்க்கப்படுவது.

ஆதாரம் : GoI, *Economic Survey*, 2002-03, P, 213.

ஐ.நா. சபை வறுமை ஒழிப்புக்கான பன்னாட்டு ஆண்டு என 1996 ஆம் ஆண்டை அறிவித்த பின்பும் இங்கு வறுமை ஒழியவில்லை.

உலக வங்கி அறிக்கையின்படி 1998 ஆம் ஆண்டில் உலகெங்கும் 1198.9 மில்லியன் மக்கள் வறுமையில் வாடினர் - அதாவது ஒரு நாளைக்கு ஒரு டாலருக்கு குறைவாக வாழ்க்கை நடத்துபவர்கள். இது உலக மக்களில் 24% ஆகும். இதில் அதிக பட்சமாக 522 மில்லியன் தெற்காசியாவில் உள்ளனர். தெற்காசியா மக்களில் 40% வறுமையில் வாடினர். அவ்வறிக்கையின்படி இந்திய தேசிய வறுமைக் கோட்டின்படி 1994ல் 35% (ஊரகம் 36.7% நகரம் 30.5%) மக்கள் வறுமைக் கோட்டுக்கு கீழே வாடினர். அதே அறிக்கையின்படி பன்னாட்டு வறுமைக் கோட்டுக்குக் கீழே (ஒரு நாளைக்கு ஒரு டாலருக்கும் குறைவாக) 1997ல் 44.2% இந்தியாவில் வாழ்கின்றார்கள்.[1]

## 3. வறுமைக்கானக் காரணங்கள்

**1. நாடு முன்னேறாமை :** வறுமைக்கான முதல் காரணம் நாடு பொருளாதாரத்தில் முன்னேறாததாகும். பல துறைகளிலும் நாடு பின்தங்கி உள்ளதால் பெரும்பான்மையான மக்கள் ஏழ்மையில் உழல்கின்றனர்.

**2. குறைந்த தனிநபர் வருவாய் :** இந்தியனின் தனிநபர் வருவாய் மிகக் குறைவாக உள்ளது. 2005 ஆம் ஆண்டில் சராசரியாக இந்தியனின் ஆண்டு வருமானம் 720 அமெரிக்க டாலராக இருந்தபோது, நார்வேயில் 53,590, சுவிட்சர்லாந்தில் 54,930, சப்பானில் 38,980, அமெரிக்காவில் 43,740, சிங்கப்பூரில் 27,490, இங்கிலாந்தில் 37,600, சீனாவில் 1,740, உலக சராசரி 6,987, அமெரிக்க டாலர்களாக இருந்தன.[2]

**3. குறைவாக முன்னேறுதல் :** நம் நாடு ஆமை வேகத்தைவிட குறைவாகவே முன்னேறுகிறது. தனி நபர் வருவாய் ஆண்டுக்கு 0.5 விழுக்காடுதான் உயர்கின்றது.

4. மக்கள் நெருக்கம் : இந்தியாவில் சராசரியாக ஒரு சதுர கி.மீக்கு வாழும் மக்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது. 1971ல் சதுர கி.மீக்கு 177 மக்களாக இருந்தது 1991ல் 274 ஆகவும் 2001 ல் 324 ஆகவும் உயர்ந்துவிட்டது.

5. விரைவான மக்கள் பெருக்கம் : மக்கள் நெருக்கம் அதிகமாக இருப்பதோடு ஆண்டு சராசரி மக்கள் தொகை வளர்ச்சி விகிதமும் நம் நாட்டில் அதிகம். 1941-51 ஆண்டுகளில் ஆண்டுக்கு சராசரியாக மக்கள் தொகை வளர்ச்சி 1.31 விழுக்காடாக இருந்தது. 1971 - 81ல் 2.48, 1981 - 91ல் 2.14, 1991-2001ல் 1.93 விழுக்காடு என்று உயர்ந்துவிட்டது.

6. சொத்துக்கள் இல்லாமை : உற்பத்திச் சாதனங்கள் உட்பட பல்வேறு சொத்துக்கள் சராசரி தனி நபருக்கு மிகவும் குறைவாக உள்ளது. இதனால் வறுமையை விரட்டுமளவிற்கு உற்பத்தியை அதிகப்படுத்த முடிவதில்லை.

7. நலிந்த மக்கள் : போதிய உணவு, உடை, உறைவிடம், கல்வி வசதி மற்றும் அறிவை வளர்த்துக் கொள்ள வசதி இல்லாததால் மக்கள் தங்களின் உடல் பலத்தையும், அறிவுத் திறனையும் வளர்த்துக் கொள்ள முடிவதில்லை. இதனால் உழைப்புத்திறன் குறைவாகவே உள்ளது.

8. வேலையின்மை : வேலையில்லாச் சிக்கல் எங்கும் நிலவி இருக்கின்றது. நாளொரு மேனியும் பொழுதுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்றது. முதலாவது அய்ந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் வேலையில்லாதோரின் எண்ணிக்கை 33 இலட்சமாக இருந்தது, 2000 டிசம்பரில் 41.3 மி. நபர்கள் வேலை வாய்ப்பக்கத்தில் பதிவு செய்துள்ளனர். வேலையில்லாததால் வருமான மின்றி வறுமையில் வாடுகின்றனர்.

9. வேளாண்மையைச் சார்ந்திருத்தல்: சொற்ப இலாபம் தரக்கூடிய வேளாண்மையை பெரும்பாலோர் சார்ந்திருக்கின்றனர். பருவமழை பொய்க்கும் போதெல்லாம் மக்களின் வருவாயும் குறைகின்றது.

10. குறைந்த மூலதனம் : பொதுவாக எல்லாத்துறைகளிலுமே சராசரித் தொழிலாளிக்குக் குறைந்த மூலதனமே உள்ளது. இதனால் அவர்களின் உற்பத்திறனும் வருவாயும் குறைவாக உள்ளன.

11. குறைந்த மூலதன ஆக்கம் (Capital formation) : இருக்கக்கூடிய மூலதனம் குறைவாக இருப்பதோடு ஆண்டு தோறும் மூலதன ஆக்கமும் குறைவாக இருக்கின்றது. விரைவான பொருளாதார வளர்ச்சிக்குப் போதிய மூலதன ஆக்கம் இல்லை. மக்களின் குறைந்த சேமிப்புத் திறனும், சேமிப்பு நாட்டமுமே இதற்குக் காரணமாகும்.

12. பின்தங்கிய உற்பத்தி முறைமை : பொதுவாக ஒவ்வொரு துறையிலும் உற்பத்தி முறைமை மிகப் பின் தங்கியதாக உள்ளது. இதனால் உற்பத்தியளவு குறைவு, உற்பத்திச் செலவு அதிகம். குறைந்த கூலியும் இலாபமும் கிடைக்கின்றது.

13. வளங்கள் பயன்படுத்தாமை : வறுமையும் பட்டினியும் நிலவும் அதே இடத்தில் பல்வேறு வளங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்படாமல் வீணாக்கப்படுகின்றன. உதாரணமாக நம் நாட்டில் கிடைக்கும் தண்ணீர் வளங்களில் 5%தான் பயன்படுத்துப்படுகின்றது.

14. கல்வித் திட்டம் : நம்நாட்டின் கல்வித்திட்டம் அவ்வளவு பயனுள்ளதாக இருப்பதில்லை; அறிவை வளர்ப்பதில்லை; உற்பத்தியை அதிகப்படுத்தவும், வேலை வாங்கித் தரவும் உதவுவதில்லை.

**15. பணவீக்கம் :** தொடர்ந்து இருந்துவரும் பணவீக்கத்தினாலும் வறுமை தொடர்கின்றது. பணவீக்கத்தினால் பணத்தின் வாங்கும் திறன் மிகவும் குறைந்து விடுகின்றது.

**16. குறைவான நுகர்ச்சி :** உற்பத்திக் குறைவாக இருப்பதாலும் மக்கட் தொகை அதிகமாக இருப்பதாலும் மக்களின் பல்வேறு பொருட்களின் சராசரி நுகர்ச்சி மிகவும் குறைவாக உள்ளது. மேலும் சில பொருள்களின் சராசரி நுகர்ச்சி அளவு குறைந்து கொண்டே வருகின்றது. உதாரணமாக இந்தியாவில் 1951ல் 60.7 கிராமாக இருந்த பயறு வகைகளின் (Pulses) தினசரி சராசரி நுகர்ச்சி 2000ல் 32 கிராமாகக் குறைந்து விட்டது.[1]

**17. மண்டல ஏற்றத்தாழ்வு :** நாட்டில் சில மாநிலங்கள் மட்டும் ஓரளவு முன்னேறியிருக்க, பிற மாநிலங்கள் மிகவும் பின்தங்கியே உள்ளன. ஒவ்வொரு மாநிலத்திலும் சில பகுதிகள் முன்னேறியிருக்க பிற பகுதிகள் பின் தங்கியே உள்ளன.

**18. கடன் சுமை :** தனி மனிதனும் நாடும் மிகுந்த கடன் சுமையால் ஈட்டக் கூடிய வருவாயில் கணிசமானப் பகுதி வட்டியைக் கொடுக்கவே செலவிடப்படுகின்றது.

**19. ஆடம்பரச் செலவு :** கடனிலும் வறுமையிலும் கிடந்து உழன்றாலும் நம் மக்கள் திருமணம், பண்டிகைகள், பிறப்பு முதல் இறப்பு வரையிலான பல்வேறு விழாக்கள் போன்றவைகளுக்குத் தங்களுடைய சக்திக்கு மீறி மேலும் கடன் வாங்கிச் செலவு செய்து விட்டு, பின்பு அல்லல் படுகின்றார்கள்.

**20. சமூகக் கொடுமைகள் :** கூட்டுக் குடும்பமுறை, சாதிமதக் கொடுமைகள், பழைய மூடப்பழக்க வழக்கங்களில் அர்த்தமில்லாத மோகம், பிறர் வளர்ச்சியைக் கெடுக்குந்தன்மை போன்ற கொடிய, காலத்திற்கு ஒத்துவராத சமூக கொடுமைகள் மலிந்துள்ளதாக இந்தியா உள்ளது. இதை மீறி தனிமனிதனால் முன்னேற முடியவில்லை.

**21. ஆர்வமின்மை :** இந்தியாவில் பெரும்பான்மையாக வாழும் இந்துக்கள் தன்னுடைய நிலைக்குக் காரணம் ''முற்பிறவியில் செய்த வினை'' ''தலைவிதி'' எனச் சொல்லிக் கொண்டும் நம்பிக்கொண்டும் முன்னேற வேண்டு மென்ற ஆர்வமும் முயற்சியும் இல்லாமலிருக்கின்றனர்.

**22. அதிக சார்ந்திருப்போர் :** நம் நாட்டில் ஒருவர் சம்பாதித்தால் பலர் அவரைச் சார்ந்திருக்கின்றார்கள். எடுத்துக்காட்டாக 1999-2000 ஆம் ஆண்டில் மொத்த மக்கள் .1,004மில்லியனில் 337 மில்லியன் மக்கள் ஏதேனுமொரு வேலை செய்தபோது, மீதி மக்கள் இவர்களை சார்ந்திருந்தனர். சம்பாதியத்தை எல்லோரும் பகிர்ந்துகொள்ள வேண்டியிருப்ப தால் ஏழ்மையையும் பகிர்ந்து கொள்ள வேண்டியிருக்கின்றது.

**23. வசதிகள் :** போக்குவரத்து, செய்தித் தொடர்பு, மருத்துவம், சுகாதாரம், கல்வி போன்ற_வசதிகள் குறைவாக இருப்பதால், தனி மனிதனின் உழைப்பும், வருவாயும் குறைவாக உள்ளது.

## 4. வறுமையை ஒழிக்கும் வழிமுறைகள்
(Measures to remove poverty)

1. பொருளாதார வளர்ச்சி விகிதத்தை அதிகப்படுத்த வேண்டும்.
2. செல்வம், வருவாய், நுகர்ச்சி ஆகியவைகளில் இருக்கும் ஏற்றத்தாழ்வுகளை ஒழித்தாக வேண்டும்.

---

1. GOI, Economic Survey, 2001-02, P.S.-21

3. வளர்ச்சியின் நன்மையை ஏழைகளும் அனுபவிக்குமாறு செய்தல் வேண்டும். உதாரணமாக ஏழைகள் உபயோகிக்கும் பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டும்.

4. வேலையில்லாச் சிக்கலை ஒழித்தாக வேண்டும். உழைப்பின் பெருமையை மக்கள் உணர வேண்டும். கடுமையாக உழைப்பதை அவர்கள் (தாழ்வாக நினைக்காமல்) பெருமையாக நினைக்க வேண்டும்.

5. மக்கள் தொகை வளர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டும்.

6. எல்லோருக்கும் கல்வியளிப்பதுடன் கல்வி முறையை பயனுள்ள வகையில் மாற்றியமைக்க வேண்டும்.

7. ஒல்லும் வகையாலும் உற்பத்தியை உயர்த்த வேண்டும்.

8. நாட்டில் குறிப்பாக பின்தங்கிய மண்டலங்களில் வளர்ச்சியை ஊக்குவிக்குமாறு பொருளாதார மற்றும் சமூக அமைப்பு முறைகளை மாற்றியமைக்க வேண்டும்.

9. நிதியுதவி, தொழில் நுணுக்க உதவி போன்றவைகள் எளிதாக எல்லா மக்களையும் சென்றடைய ஏற்பாடுகள் செய்தாக வேண்டும்.

10. ஏழை மக்களுக்கு வீடு, குடிநீர், கல்வி போன்ற வசதிகளைப் பெருக்க வேண்டும்.

11. டாகோஸ்டா (E.P.W.Da Costa) கூறுவது போல் ஆதரவற்றவர்களுக்கு மறுவாழ்வுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

12. நிலச் சீர்திருத்தங்களை மேற்கொண்டு, உழுபவர்களுக்கே நிலம் என்ற கொள்கையை நடைமுறைப்படுத்தினால் வேளாண் தொழிலாளர்களுக்கிடையே நிலவும் வறுமையைப் போக்கலாம்.

13. ஏழைகளுக்குப் பயன்தரத் தக்க வகையில் செல்வ, வருவாய் மறுபங்கீட்டுக் கொள்கையும் நிதிக் கொள்கையும் பணவியல் கொள்கையும் மாற்றியமைக்கப் பட வேண்டும்.

14. கருப்புப் பணத்தை வெளிக்கொணரவும், பணவீக்கத்தையும் ஆடம்பரச் செலவையும் கட்டுப்படுத்த செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

15. திறமையும், உற்பத்தித்திறமையும் அதிகரிக்குமாறு கல்வி மற்றும் பயிற்சித் திட்டங்களை சீரமைக்க வேண்டும்.

16. உழைப்புச் செறிவுத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

17. மனித சக்தியுட்பட எல்லா வளங்களையும் வீணாக்காமல், முறையாகத் திட்டமிடப்பட்டு உற்பத்தியில் ஈடுபடுத்த வேண்டும்.

18. மனித மூலதனத்தை உயர்த்தும் வகையில் கல்வி, பொதுச் சுகாதாரம், மருத்துவம் போன்ற வசதிகளைப் பெருக்குதல் வேண்டும்.

19. ஏழைகளுக்கான விரிவான சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப் படல் வேண்டும்.

**உரிய கொள்கை :** வறுமை ஒழிப்பை நாட்டின் பொருளாதார, சமுதாய மாற்றத்தின் ஓர் அம்சமாகவே கருதப்பட வேண்டும். நாடு பல துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளது. ஆனால் சமுதாயத்தில் அடிமட்டத்தில் இருக்கும் நலிவடைந்த பகுதியினர் இவ்வளர்ச்சியின் பயன்களைப் பெற முடியவில்லை. எனவே இம்மக்களுக்கு நேரடியாகப் பயனளிக்கும் திட்டங்களை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது.

சமுதாய மாற்றம், கல்வி வளர்ச்சி, மக்களிடையே விழிப்புணர்வு, பழக்க வழக்கங்கள் போன்றவைகளில் மாற்றத்தை ஏற்படுத்தாமல் ஏழை மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்த இயலாது.

**5. திட்டமும் வறுமை ஒழிப்பும்**

ஆங்கிலேயர் ஆட்சியாலும் பாகிஸ்தான் பிரிந்ததாலும் ஏற்பட்ட பொருளாதாரச் சீர்கேடுகளை ஒழுங்குபடுத்துவதாகவேமுதலாவது அய்ந்தாண்டுத் திட்டம் இருந்தது. இரண்டாவது திட்ட காலத்தில் வாழ்வின் கடைநிலையிலுள்ள மக்களுக்கு நன்மை செய்ய வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தியது. நான்காவது திட்டத்தில் கடைநிலை மக்களுக்காக ஒரு தேசிய குறைந்த பட்ச தேவைத் திட்டம் உருவாக்கப்பட்டது.

1971 முதல் ''வறுமையை விரட்டுவோம்'' என்ற முழக்கம் கேட்ட தாயினும், அதன் செயல் நடவடிக்கை ஆரம்ப காலத்தில் மிகவும் குறைவாகவே இருந்தது. சராசரி தனிநபர் மாத நுகர்ச்சி ரூ. 40.60க்கு கீழே இருப்பவர்களை வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழ்பவர்கள் என முதன் முதலாக அய்ந்தாவது திட்டம் தான் அடையாளம் கண்டு கொண்டு அவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் திட்டங்களை செயற்படுத்தத் துவங்கியது.

வறுமையை ஒழிக்க முந்தையத் திட்டங்கள் எடுத்த கொள்கைகள் தோல்வி யடைந்து விட்டன என இத்திட்டம் ஒத்துக்கொண்டது. வறுமைக் கோட்டிற்குக் கீழே இருப்பவர்கள் வாங்கி நுகரும் பொருட்களின் உற்பத்தி வளர்ச்சிக்கென ரூ. 3.3 கோடி ஒதுக்கப்பட்டது. இவர்களின் வாழ்க்கைத்தரம் உயர முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. வருவாய், செல்வம் ஆகியவற்றில் ஏற்றத்தாழ்வும், பொருளா தார வளர்ச்சியின்மையும் தான் எழ்மையின் இரு கால்களென இத்திட்டம் உணர்ந்தது. மக்கள் தொகையை கட்டுப்படுத்தி, உள்நாட்டு உற்பத்தியை அதிகப்படுத்த முயற்சிக்கப்பட்டது. வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதன் மூலம் வறுமையை ஒழிக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

ஜனதா அரசால் தயாரிக்கப்பட்ட ஆறாவது அய்ந்தாண்டுத் திட்டநகல் (1978-83) 1977-78ல் 46% ஆக இருக்கும் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களின் அளவை 27% ஆக அடுத்த 10 ஆண்டுக்குள் (1986-1987க்குள்) குறைக்க வேண்டுமென வற்புறுத்தியது.வறுமை ஒழிப்புத் திட்டங்களை நிறைவேற்றுவதில் பல குறைகள் இருந்தன. 1994-95 ஆம் ஆண்டிற்குள் வறுமைக் கோட்டிற்குக் கீழே உழல்பவர்களின் விழுக்காட்டை 10-க்குக் குறைவாகக் கொண்டுவர வேண்டுமென ஏழாவது திட்ட நகல் வலியுறுத்தியது. 1999 - 2000 ஆம் ஆண்டிலும் நம் நாட்டில் 26% மக்கள் வறுமையில் வாடினார்கள். வறுமை ஒழிப்புத் திட்டங்களுக்கும் இவற்றை செயல்படுத்துவதற்கும் எவ்வளவு வித்தியாசமுள்ளது என்பதையே இக்கசப்பான உண்மை எடுத்தியம்புகின்றது.

15.08.1995ல் மத்திய அரசு தேசிய சமூக உதவி திட்டம் ஒன்றை அறிவித்தது. இதன் செலவு முழுவதையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்கின்றது. (அடுத்த அத்தியாயத்தில் இதன் விளக்கம் உள்ளது).

**6. வறுமை ஒழிப்புத் திட்டங்கள்**

வேலையின்மையை ஒழித்தால்தான் வறுமையை ஒழிக்க முடியும். எனவே வேலை வாய்ப்புத் திட்டங்களும் வறுமை ஒழிப்புத் திட்டங்களும் இரட்டைக் குழல் துப்பாக்கிகள் எனலாம்.

## பின்னிணைப்புப் பட்டியல் – 1

### சில வேளாண் பொருள்களின் குறைந்தபட்ச ஆதரவு விலை / கொள்முதல் விலை

(குவிண்டாலுக்கு ரூபாயில்)

| பொருள் | 80–81 | 91–92 | 96–97 | 2001–02 | 03–04 | 04–05 | 05–06 | 06–07 |
|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் | | | | | | | | |
| சாதா ரகம் | 105 | 230 | 380 | 530 | 550 | 560 | 570 | 580[7] |
| 'ஏ' ரகம்[1] | – | 250 | 415 | 560 | 580 | 590 | 600[5] | 610[7] |
| கோதுமை | 117 | 275 | 475 | 620 | 630 | 640 | 650[4] | 750 |
| சிறு தானியம்[2] | 105 | 210 | 310 | 485 | 505 | 515 | 525 | 540 |
| பருப்பு வகை | 450 | 600 | 815 | 1200 | 1400 | 1425 | 1435 | 1445 |
| நிலக்கடலை | 206 | 645 | 920 | 1340 | 1400 | 1500 | 1520 | 1520 |
| சூரிய காந்தி | 183 | 670 | 960 | 1185 | 1250 | 1340 | 1500 | 1500 |
| சோயா (மஞ்சள்) | – | 445 | 700 | 885 | 930 | 1000 | 1010 | 1020 |
| கரும்பு | 13 | 26 | 45.90 | 62.05 | 73 | 74.5 | 79.5 | 80.25[6] |
| பருத்தி[3] | 304 | 695 | 1180 | 1675 | 1725 | 1760 | 1760 | 1770 |
| சணல் (TD5) | 160 | 375 | 510 | 810 | 860 | 890 | 910 | 1000 |

குறிப்பு : 1.97--98 முதல் நெல் சாதாரண ரகம், 'ஏ' ரகம் என இரு வகையாக பிரிக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்பு சாதாரண ரகம் சன்ன ரகம், மிகச் சன்ன ரகம் என 3 வகையாக இருந்தது. இதில் மிகச் சன்ன ரகம் இவ்வரியில் தரப்பட்டுள்ளது. 2. சோளம், கம்பு, கேழ்வரகு, 3 F 414/H 777 ரகம் 4. கூடுதலாக போனஸ் குவிண்டாலுக்கு ரூ.50 தரப்படும். 6. 07–03 • ரூ.81.18 7. 10–1–2006 முதல் 31–3–2007 கொள்முதல் செய்வதற்கு குவிண்டாலுக்கு ரூ.40 போனசாக தரப்படும்.

ஆதாரம் : GOI, *Economic Survey*, 2006-07, P.S-65 + of 98-99, P.S-68.